# வாழைக்கான விலை முன்னறிவிப்பு

இந்தியாவில், வாழை அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு பெரும்பாலும் உள்நாட்டு சந்தைகளிலே விற்பனை செய்யப்படுகிறது. இந்தியாவில் முக்கியமாக கேவெண்டிஸ் வகை வாழை பயிரிடப்பட்டாலும், பல்வேறு விதமான வாழை வகைகள் காணப்படுகிறது. இந்தியாவில், வடகிழக்கு மற்றும் தெற்கு மாநிலங்களில் வாழை அதிக அளவில் பயிரிடப்படுகிறது. வாழை சாகுபடியில் மஹாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவிற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு அதிக பரப்பளவை கொண்டுள்ளது. வாழை உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடத்திலும், அடுத்தபடியாக மஹாராஷ்டிராவும் உள்ளது, ஆனால் உற்பத்தி திறனில் மஹாராஷ்டிரா முதலிடத்திலும் அடுத்தபடியாக தமிழ்நாடு மற்றும் மத்திய பிரதேசமும் உள்ளது.

தமிழ்நாட்டில் ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வாழை அதிக அளவில் பயிரிடப்படுகிறது. கோவை, ஈரோடு மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் வாழை பயிரிடப்படும் நேந்திரன் வாழையானது கேரள சந்தைகளின் தேவையை பூர்த்தி செய்கிறது. கேரள மக்களின் உணவு மற்றும் சீவல் தயாரிப்பில் நேந்திரன் வாழையானது முக்கிய பங்குவகிக்கிறது. திருச்சி சந்தைக்கு வாழைவரத்து லால்குடி, புதுக்கோட்டை, முசிறி, கடலூர் மற்றும் தேனி ஆகிய பகுதிகளிலிருந்து வருகிறது. தற்போது, கோயம்புத்தூர் சந்தைக்கு புதுக்கோட்டை, திருக்காட்டுப்பள்ளி மற்றும் கடலூர் ஆகிய பகுதிகளிலிருந்து பூவன் வரத்தும், சத்தியமங்கலம், கோபிசெட்டிப்பாளையம் ஆகிய பகுதிகளிலிருந்து கற்பூரவள்ளி வரத்தும் வருகிறது. நேந்திரன் வரத்தானது மேட்டுப்பாளையம் மற்றும் கேரளாவிலிருந்து வருகிறது. வர்த்தக மூலங்களின் படி, பண்டிகை காலங்கள் காரணமாக வரும் மாதங்களில் வாழையின் தேவை அதிகரிக்ககூடும்.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை

முன்னறிவிப்புத் திட்டம் கடந்த 18ஆண்டுகளாக கோயம்புத்தூர் சந்தையில் நிலவிய பூவன், கற்பூரவள்ளி மற்றும் நேந்திரன் விலை மற்றும் சந்தை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவின் அடிப்படையில் அக்டோபர் முதல் டிசம்பர் 2021 மாதங்களில் பூவன் வாழையின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ.15, கற்பூரவள்ளி ரூ. 25 மற்றும் நேந்திரன் வாழையின் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.32 வரை இருக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தகுந்த விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி- 0422-2431405


**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


பேராசிரியர் மற்றும் தலைவர்
பழப்பயிர்கள் துறை
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611269

## Price Forecast for Banana

India is the largest producer of bananas and most of the bananas grown in India are sold in the domestic markets. Even though more than half of the bananas produced in India are Cavendish cultivars, the country is host to a wide diversity of bananas. The major banana growing states are in the NorthEastern and the Southern parts of the country. Tamil Nadu has the largest area followed by Maharashtra and Karnataka. Tamil Nadu also ranks first in production, followed by Maharashtra, but highest productivity is recorded in Maharashtra, followed by Tamil Nadu and Madhya Pradesh.

In Tamil Nadu, major banana growing districts are Erode, Coimbatore, Trichy, Tirunelveli, Tuticorin and Kanyakumari. Majority of Nendran cultivars are grown in Coimbatore, Erode and Kanyakumari districts in order to cater the needs of Kerala markets. Traditionally, Nendran banana is very important among Kerala people's diet and chips making. At Present, banana arrivals are mainly from Lalkudi, Pudukottai, Musuri, Cuddalore and Theni to Trichy market. In Coimbatore market, Poovan banana are usually coming from Pudukottai, Thirukattupalli and Cuddalore. Karpuravalli arrivals are from Sathyamangalam, Gobichettipalayam and Mettupalayam, Nendran arrivals are from Mettupalayam and Kerala. According to the Trade sources, demand for banana may raise mainly due to the festival seasons.

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University analysed the past 18 years prices of cultivars of Poovan, Karpooravalli and Nendhran banana of Coimbatore. The results of analysis and trader survey

indicated that the expected average farm gate price will be around Rs.15 per kg for Poovan, Rs.25 for Karpuravalli and Rs.32 per kg for Nendhran respectively, in Coimbatore market during October-December'2021. Hence, farmers are advised to take appropriate selling decision accordingly.

***For further details contact:***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore – 641 003.*
*Phone: 0422-2431405*

***For technical details please contact:***

*Professor and Head*
*Department of Fruit Crops*
*Horticultural College & Research Institute*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore -641003.*
*Phone -0422 -6611269*